அற்புத இந்தியா!
KATHA

# சோனமின் லடாக்

மனீஷ் லகானி



பச்சை
எனக்கு படிக்க பிடிக்கும்


## வாங்க! பச்சை புக்ஸ் படிக்க வாங்க!



அற்புத இந்தியா!

2

என்னுடன் சேர்ந்து
நமது அற்புத
இந்தியாவை
பார்க்க வரீங்களா?
உங்களுக்காக, இதோ!
52 விறுவிறுப்பான
கதை புக்ஸ்!



படத்தை பார்த்து
குழந்தைகளை
உற்சாகமுடன் கதை
சொல்ல தூண்டும்
வார்த்தைகளற்ற
புத்தகம் இதோ!

**ஆசிரியர்களுக்கான
workshop பெற
அணுகவும்
+ 91 8800170200**



# சோனமின் லடாக்

மனீஷ் லகானி

மொழியாக்கம்: வசந்தி

KATHA
டெல்லி | சென்னை | பெங்களூர்





என் பேரு சோனம்.
நான் லடாக்குல வாழுறேன்.

சோனம் தனது நண்பர் மனீஷ் லக்கானி மற்றும்
அவரது செல்ல நாயுடன்.



நான் அஞ்சாவது படிக்கறேன்.
என் குடும்பத்துக்கு சொந்தமான
பாஷ்மினா செம்மறி ஆட்டு மந்தய
நான் தான் பாத்துக்கறேன்.



நான் சங்க்பா பழங்குடி இன பொண்ணு.
ஆடுகள மேய்க்கிற நாடோடி இனத்த
சேந்தவங்க.



குளிர் காலத்துல லடாக்கில் இருக்குறது எல்லாமே உறஞ்சு போயிடும். பெருசு பெருசா இருக்குற அருவிங்க கூட!

ஆனா வெயில் காலத்துல லடாக்
கததகதப்பா கலர்-கலரா இருக்கும்.





லடாக்ல எனக்கு ரொம்ப
புடிச்ச ஏரி ட்ஸோகர் ஏரிதான்.



எனக்கு சைக்கிள் ஓட்டி
விளையாடறது ரொம்ப புடிக்கும்!

"சைக்கிள், என்னோட
பெஸ்ட் பிரண்டு!"



ஆனா, என் குட்டி பிரண்டு, பெமாக்கு
அவ ஆட்டு குட்டிதான் பெஸ்ட் பிரண்டு!



ஆடுங்க, நாய்ங்க எல்லாமே நம்மகூட
ரொம்ப அன்பா இருக்கும்னு என்
பாட்டி அடிக்கடி சொல்லுவாங்க!



நாங்க காட்டு எருமையோட
தோலால செஞ்ச கம்பளிய
தான் பயன் படுத்துறோம்.

இது தான் எங்க சமையலறை!




காட்டு எருமைங்க
எங்களோட பிரண்ட்ஸ்.

எங்களுக்கு தேவையான
உணவ பயிர் செய்ய
ஹெல்ப் பண்ணும்!


லடாக்குல வேற சில
விலங்குகளும் இருக்கு.


சாதுவான குதிரைங்க,


அரிய வகை யுரேஷிய
நீர் நாய்ங்க,


அது மட்டும் இல்லாம, சங்கு,
இமயமலை ஓநாய்ங்க.




இதான் திக்ஸே மடாலயம்.
சிந்து சமவெளியில இருக்கு.

லடாக்குல நெறய
மடாலயங்க இருக்கு.



லடாக்குல எல்லாருக்கும் ரொம்பவே புடிச்சது, இரவு நேரத்துல ஜொலி ஜொலிக்கற தாரகைக தான்.



# இமயமலையின் இதயம்!


உங்க ஊர்லயிருந்து லடாக்குக்கு போற வழிய கண்டுபிடிங்க.

## சங்பாக்கள்

சங்பாக்கள் கிட்டதட்ட நாடோடிங்க மாதிரி தான். ஆனா அவங்க முழு நாடோடிங்க இல்ல. அவங்க உலகத்தோட ரொம்ப சில்லுனு இருக்குற ஒரு பாலைவனத்துல தான் இருக்காங்க. அது சங்டங் என்று இமயமலையில இருக்குற ஒரு திபெத்தியப் பீடபூமி. அது லடாக்கிலிருந்து திபெத் வரைக்கும் பரந்து விரிஞ்சி இருக்கும்.

சங்பாக்கள் இறைச்சி மற்றும் கம்பளிய விக்கறதுக்காக ஒரு புல் பிரதேசத்திலிருந்து மற்றொரு புல் பிரதேசத்துக்கு போவாங்க.

சங்பாக்கள் பாஷ்மினா மற்றும் கடமாக் கம்பளிகள வச்சி எத்தனையோ வித்தியாசமான வேலைப்பாடுகள செய்வாங்க.



சங்பாக்கள் வார்கோதுமை, கோதுமை மற்றும் பட்டாணிகள பயிர் செய்றாங்க.

# லடாக்கில் உள்ள உருகும் பனிப்பாறைகள்

லடாக்கில் ஏராளமான பனிப்பாறைங்க இருக்கு. அதெல்லாம் எங்களுக்கு ரொம்ப முக்கியம். ஆனா, சுற்றுச்சூழல் மாசு அடையறதாலையும், மரங்கள் வெட்டறதாலையும், பூமியின் வெப்பம் தொடர்ந்து அதிகமாகுது. இதனால லடாக்குல பனிப்பாறைங்க உருகுது.

## யோசியுங்கள்

லடாக்கில் பனிப்பாறைங்க
உருகுவத தடுக்க மாசுபாட்ட
எவ்வாறு குறைக்கலாம்?

## கேளுங்கள்

நம்முடைய சுற்றுச்சூழல
பாதுகாக்க என்ன செய்யணும்?

## கலந்துரையாடுங்கள்

உங்க நண்பர்களோட சேந்து,
மாசுபாட்ட குறைக்க ஆறு மாத
காலத் திட்டத்த உருவாக்குங்க.

## செயல்படுங்கள்

என்ன முடியுமோ செய்யுங்க. ஒரு சிலவற்றை செய்யத் தொடங்குங்க.

- முடிஞ்சவர காலாற நடங்க, இல்லன்னா சைக்கிளில் போங்க.
- குப்பைய மறுசுழற்சி செய்யுங்க.
- துணிப்பைகள பயன்படுத்துங்க, பிளாஸ்டிக் வேண்டான்னு உறுதியா இருங்க.
- மரங்கள நடுங்க.
- உள்ளூரிலேயே உற்பத்தி செய்யற பொருள வச்சி தயாரிக்கும் உணவையே வாங்கிச் சாப்பிடுங்க.




லடாக்குக்கு வந்து
என்ன பாருங்க!

**மனீஷ் லகானி** ஒரு புகைப்படக்கலைஞர் வீரசாகசங்களைத் தேடிச்செல்பவர். அவருக்கு தன் கேமரா, சைக்கிள் மற்றும் மலைகளின் மீது ரொம்ப பாசம். அவருக்கு மலைகளின் மீது இருக்கும் அன்பு அவரை பல முறை லடாக்குக்கு அழைத்து சென்றிருக்கிறது.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: **லதா ராமகிருஷ்ணன்**

**கீதா தர்மராஜனுக்கு** குழந்தைகளுக்காக கதை எழுதுவது என்றால் மிகவும் பிடிக்கும். இலக்கியம் மற்றும் கல்வியில் அவர் ஆற்றிய பணிக்காக 2012 இல் பத்மஸ்ரீ விருது பெற்றார்.

## இந்த கதை பற்றி

லடாக் என்ற அழகான இடம் வழியாக சோனமுடன் பயணித்து இந்த குளிர் பாலைவனத்தின் கலாச்சாரம் மற்றும் வாழ்வாதாரம் பற்றி அனைத்தையும் அறிந்து கொள்ளுங்கள்.

## ஆசிரியருக்கு

ILR புத்தகத்திற்கு உங்களை வரவேற்கிறோம். ஒவ்வொரு தொடரிலும் 13 புத்தகங்கள் என மொத்தம் 8 தொடர்கள் இருக்கின்றன. இவை 0 வார்த்தைகள் கொண்ட கதைகளில் இருந்து 3000 வார்த்தைகளை கொண்ட கதைகளை படிக்க நிச்சயம் உற்சாக படுத்தும்! குழந்தைங்க பாஷையில எழுதிய இந்த கதைங்க, உறுதியாக அவங்க எண்ணும் எழுத்தும் அதிகரிக்கும்!

எடிட்டர் & ஆர்ட் டைரக்டர்: **கீதா தர்மராஜன்** | ஆசிரியர் குழு: **வசந்தி, அஷ்வினி, ராகினி, கௌசல்யா** | டிசைனர்: **விக்ரம் குமார்** | டீடிபி: **உதயகுமார்**

KATHA

இந்த நூலில் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது
காப்புரிமை © கதா, 2017,2021
பிரதியின் காப்புரிமை © மனீஷ் லக்கானி
சித்திரங்களுக்கான காப்புரிமை © மனீஷ் லக்கானி
இப்புத்தகத்தின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை, வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி புத்தகத்தின் எந்தப் பகுதியையும் மீண்டும் உருவாக்கவோ அல்லது வேறு எந்த வடிவத்திலும் பயன்படுத்தவோ முடியாது.
புது தில்லியில் அச்சிடப்பட்டது.
ISBN 978-81-97937-02-6

KATHA ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். இந்த புத்தகம் 300 மில்லியன் குடிமக்களின் சவாலின் படைப்பானதாகும். பள்ளிக்குச் செல்லும் 300 மில்லியன் இந்தியக் குழந்தைகளுக்கு புதிய கற்றல் முறைகள் மூலம் அவர்களின் வகுப்புக்குறிய வாசிப்பை அடைய நாங்கள் உதவுகிறோம்.

டெல்லி: A3, சர்வோதயா என்கிளேவ், ஸ்ரீ அரபிந்தோ மார்க், புது டெல்லி 110 017


சென்னை: 6, பாபநாசம் சிவன் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004

தொலைபேசி: டெல்லி: +91 11 4182999 | சென்னை: +91 98400 30073

மின்னஞ்சல்:marketing@katha.org

இணையதளங்கள்: www.katha.org | www.books.katha.org | www.learn.katha.org

இந்தப் புத்தகத்தின் விற்பனை வருமானத்தில் பத்து சதவிகிதம் கதா பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் தரமான கல்விக்குப் பயன்படுத்தப்படும்.



## KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பு. பத்மஸ்ரீ கீதா தர்மராஜன் அவர்களால் 1988 இல் துவங்கப்பட்டது. "இலக்கியத்திலிருந்து எழுத்தறிவு" என்ற கல்வி முறையை சாத்தியமாக்குவதே கதாவின் நோக்கம். அர்த்தமுள்ள, தரமான புத்தகங்கள் மூலம் குழந்தைகளை தரநிலை வாசிப்புக்கு(Grade Level) படிக்க எளிய முறையில் உதவி புரிகின்றோம்.

குழந்தைகளுக்கு வாசிப்பினால் ஏற்படும் மகிழ்ச்சியை அதிகரிக்க மிகுந்த அர்ப்பணிப்போடு ஒவ்வொரு வருடமும் 2,00,000 திற்கும் மேற்பட்ட வறுமையில் உள்ள குழந்தைகளுடன் நாங்கள் வேலை செய்துவருகிறோம்.

"[கதா] ... இந்தியாவின் கிரீடத்தில் ஒரு கல்வி நகை."
**– நயோயுகி ஷினோஹரா, துணை நிர்வாக இயக்குனர், சர்வதேச நாணய நிதியம்**

"குழந்தைகளுக்கு கதாவின் புத்தகங்கள் மிகவும் பிடிக்கும். அதனால்தான் ... குழந்தைகளுக்காக இதுபோன்ற அழகான படப் புத்தகங்களை உருவாக்குகிறார்கள்."
**- டைம் அவுட்**

"குழந்தைகள் நிலையான மற்றும் உண்மையான மாற்றத்தையும் இந்த சமூகத்தில் கொண்டுவர முடியும், அவர்களுடைய புத்தகத்தில் காண்பதைப்போல. இந்த எண்ணம்தான் கதாவின் பணிகளை சிறப்பாக இயக்குகிறது."
**- பேப்பர் டைகர்ஸ்**
















































Read 108 inspiring stories FREE at learn.katha.org

**FOR OUR BOOKS**

**www.books.katha.org**

குழந்தைகளுக்கானது
இந்த கதா புத்தகம்
ISBN 978-81-97937-02-6
www.books.katha.org
₹ 185/-